MINISTRY OF HEALTH
SINGAPORE

National Healthcare Group
Adding years of healthy life

NUH
National University Hospital
A member of the NUHS

Alexandra Health

EASTERN HEALTH ALLIANCE

JurongHealth

SingHealth

SINGHEALTH / PIL / T120R0

நோயாளி தகவல் கையேடு

# பொட்டேசியம் சிட்ரேட் / சோடியம் சிட்ரேட்

(POTASSIUM CITRATE / SODIUM CITRATE)

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

பொட்டேசியம் மற்றும் சோடியம் சிட்ரேட்டுகள், சிறுநீரின் காரத்தன்மையை அதிகரிக்க (அதாவது, அதன் அமிலத்தன்மையைக் குறைக்க) பயன்படுத்தப்படுகின்றன. இதன்மூலம் சிறுநீர்க் குழாய் கிருமித்தொற்றுகளின் அசௌகரியத்தைப் போக்க உதவுகின்றன. இந்த மருந்துகள் சிறுநீரிலுள்ள அமிலத்தின் அளவைக் குறைப்பதால், சிறுநீரகக் கற்கள் உருவாவதைத் தடுக்க அல்லது அவற்றுக்குச் சிகிச்சை அளிக்கவும் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பிட்ட சில மருத்துவப் பிரச்சினைகளில் இரத்தத்தின் காரத்தன்மையை அதிகரிப்பதற்கும் இவை பயன்படுத்தப்படுகின்றன.

பொட்டேசியத்தை எடுத்துக் கொள்ள முடியாதபோது, அல்லது அதற்கு ஈடாக வேறு பொருளை எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்போது, சோடியம் சிட்ரேட் பயன்படுத்தப்படுகிறது. அதே போல், பொட்டேசியம் தேவைப்படுவர்களுக்கும் சோடியத்தை குறைத்துக் கொள்ள வேண்டியவர்களுக்கும் பொட்டேசியம் சிட்ரேட் பயன்படுத்தப்படுகிறது.

## மருந்தை நான் **எப்படி** உட்கொள்ள வேண்டும்?

பிரச்சினையின் கடுமைக்கேற்ப, நீங்கள் பயன்படுத்த வேண்டிய மருந்தின் அளவை மருத்துவர் தீர்மானிப்பார். இந்த மருந்தை மருத்துவர் கூறும் அளவில் பயன்படுத்துங்கள்.

திரவ மருந்து எடுப்பவர்களுக்கு

மருந்தை ஒரு முழு கிளாஸ் தண்ணீரில் கலந்து குடியுங்கள். விரும்பினால் அதனை அடுத்து கூடுதல் தண்ணீர் பருகலாம். மருந்துக் கரைசலை குளிர்ப் பதனப் பெட்டியில் சிறிது நேரம் வைத்திருந்து (ஆனால் உறைய வைக்காதீர்கள்) பருகினால் மருந்தின் சுவை சிறிது கூடும்.

படிக (crystal) மருந்து எடுப்பவர்களுக்கு

ஒரு பாக்கெட் மருந்தை குறைந்தது ஒரு முழு கிளாஸ் குளிர்ந்த நீரில் கரையுங்கள். படிகங்கள் முழுமையாகக் கரையும்வரை நன்றாகக் கலக்குங்கள். மருந்துக் கரைசல் முழுவதையும் குடியுங்கள். விரும்பினால் பிறகு கூடுதல் நீர் அருந்தலாம்.

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள்
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள்

ஒவ்வொரு வேளை மருந்தையும் உணவு உண்டு முடித்தவுடன், அல்லது உணவு அல்லது சிற்றுண்டி உண்ட 30 நிமிடங்களுக்குள் எடுங்கள். மருத்துவர் உங்களிடம் வேறு விதமாகக் கூறினாலன்றி, நீங்கள் தாராளமாக சிறுநீர் கழிக்க உதவியாக நாள் முழுவதும் நிறைய தண்ணீர் அருந்துங்கள்.

## மருந்து உட்கொள்ள **மறந்துவிட்டால்** என்ன செய்வது ?

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால் அல்லது மறந்துவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் எடுக்கத் தவறிய மருந்தை எடுக்காமல் விட்டுவிட்டு, அடுத்த வேளை வரை காத்திருங்கள். முதலில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு மருந்தோ அல்லது கூடுதல் மருந்தோ உட்கொள்ளாதீர்கள்.

## இந்த மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை ?

பின்வரும் பக்க-விளைவுகள் ஏற்பட்டால், மருந்தை நிறுத்திவிட்டு மருத்துவரைப் பாருங்கள்:

- கருநிற தார் போன்ற மலம்
- மனக் குழப்பம்
- வலிப்புகள்
- கடுமையான வயிற்றுப்போக்கு
- கடுமையான வயிற்று வலி
- சுவாசிக்க சிரமப்படுதல்

சில நோயாளிகளுக்கு இரைப்பை அல்லது அடிவயிற்று வலி, வயிற்றுப்போக்கு, குமட்டல் மற்றும் வாந்தி ஆகியவை ஏற்படலாம். சிகிச்சையைத் தொடரும்போது மருந்துக்கு உடல் பழகி, இந்த பக்க-விளைவுகள் குறையலாம். எனினும், பக்க-விளைவுகள் நீண்ட நாட்கள் நீடித்தால் அல்லது தொல்லை கொடுத்தால், மருத்துவரிடம் சோதித்துக் கொள்ளுங்கள்.

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை ?

நீங்கள் சோடியம் அல்லது பொட்டேசியம் குறைவாக உட்கொள்ள வேண்டியவர் என்றால் அதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

மற்ற மருந்துகள், மூலிகைகள், ஊட்டச்சத்து உணவுகள் அல்லது வைட்டமின்களை நீங்கள் உட்கொண்டு வந்தால், அதை மருத்துவர் மற்றும் மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.

வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை இருந்தால், அல்லது இந்த மருந்துக்கு ஒவ்வாமை ஏற்பட்டால், அதைக் கண்டிப்பாக மருத்துவரிடம் தெரிவிக்க வேண்டும். ஒவ்வாமையின்போது பின்வரும் அறிகுறிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டது பாதிக்கும்: முகம்/கண்கள்/ உதடுகள் வீங்கும், மூச்சுவிட சிரமமாக இருக்கும், அல்லது உடல் முழுவதும் அரிப்புடன் கூடிய தோல் தடிப்புகள் தோன்றும்.

நீங்கள் தாய்ப்பால் கொடுத்து வந்தால், கர்ப்பமாக இருந்தால், அல்லது சிகிச்சைக் காலத்தில் கர்ப்பமடைவதற்கு வாய்ப்பு இருந்தால், அதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

## மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும்?

மருந்தின்மீது வெப்பமோ நேரடி வெளிச்சமோ படாதவாறு, அறை வெப்பநிலையில், ஓர் உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். உங்களிடம் கூறப்பட்டாலன்றி, மருந்துகளை குளிர்ப் பதனப் பெட்டியில் வைக்காதீர்கள்.